# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய தேசிய இயக்கம்

பகுதி : **போராளி இயக்கங்களின் எழுச்சி**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள்வடிவில்தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக்குறிப்புகளுக்கானகாப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# இந்திய சுதந்திரப்போராட்ட பயங்கரவாதிகள்

- பிரிட்டிஷாரின் நிர்வாகம், கொள்கைகள் மற்றும் அடக்கு முறையால் கோபமடைந்த இந்திய இளைஞர்கள், பயங்கரவாதத்தால் தான் பூரண விடுதலை பெறமுடியும் என்று எண்ணினர். எனவே அவர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளை கொலை செய்தல், ஆங்கிலேயருக்கு விசுவாசமாக தகவல் அளிக்கும் இந்தியர்களை கொலை செய்தல், ஆயுதக் கொள்கை, பணம் மற்றும் பொருட்கள் கொள்ளை ராணுவ சதிகள், தனி சாகச வீரச்செயல்கள் போன்ற செயல்களை செய்து ஆங்கிலேயரை பயமுறுத்தி, சண்டையிட்டு வெளியேற்றுவதே இந்த பயங்கரவாதிகளின் நோக்கமாக இருந்தது.

## 1. பயங்கரவாதிகள் காலம் முதல் நிலை (1900 - 1917):

### வங்காள பயங்கரவாத செயல்கள்:

- முதல் புரட்சிகர அமைப்புகள் 1902 - மிதினாப்பூர் நாரேந்திரநாத் பாசு என்பவர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.
- கல்கத்தாவில் அனுசீலன் அமைப்பை புரோமோத்தா மிட்டர், ஜதிந்திரநாத் பானர்ஜி, மற்றும் பரிந்திரகுமார் கோஷ் ஆகியோர் ஏற்படுத்தினர்.
- 1906ல் அனுசீலன் அமைப்பின் உள் அமைப்பையும் (Inner Circle) வாரப்பத்திரிக்கை "யுகந்தர்" என்னும் பத்திரிக்கையையும் பரிந்திர குமார் கோஷ் மற்றும் புபேந்திரநாத் தத்தா ஆகியோர் ஆரம்பித்தனர்.
- 1908 ல் பராகடத்தல் புலின்தாஸ் என்பவர் தலைமையில் டாக்கா அனுசீலன் அமைப்பு ஏற்பட்டது மேலும் 1912ல் ராஸ் பிகாரி போஸ் மற்றும் சச்சின் சன்யால் வைசிராய் ஹார்டிஞ்ச் மீது டெல்லியில் வெடிகுண்டு தாக்குதல் நடத்தினர்.

**புரட்சிகர பத்திரிக்கைகள்:**

- சந்தியா, யுகந்தர், - வங்காளம்
  கல் (Kal) - மகாராஷ்டிரம்

**மகாராஷ்டிர பயங்கரவாத செயல்கள்:**

- 1879 ல் ராமோஸி விவசாயப்படையை (Ramosi Peasant Force) வாசுதேவ் பல்வந்த் பட்கே என்பவர்

பிரிட்டிஷ்க்கு எதிராக ஆயுதமேந்த ஏற்படுத்தினார்.

- சவார்க்கர் மற்றும் அவரது சகோதரர் இருவரும் இணைந்து 1890 **மித்ர மேளா (Mitra Mela) என்னும் ரகசிய அமைப்பை** ஏற்படுத்தினார்கள். இது 1904ல் அபிநவ் பாரத் என்னும் பயங்கரவாத அமைப்புடன் ஒன்றிணைந்தது.
- 1897 ல் சாப்பேக்கர் சகோதர்களான தாமோதர் மற்றும் பாலகிருஷ்ணா ஆகியோர் பூனாவின் பிளேக் ஆணையர் மற்றும் லெப்டிணன்ட் அயர்ஸ்ட் ஆகிய இருவரையும் திட்டமிட்டு கொலை செய்தனர்.

**பஞ்சாப் பயங்கரவாத செயல்கள்:**

- லாலா லஜபதிராய் மற்றும் அஜித்சிங் ஆகிய இருவரும் இணைந்து அஞ்சுமான் - ஐ - மோகிஸ்பான் - ஐ - வாட்டான் என்ற இயக்கத்தையும், பாரத் மாதா என்ற இதழையும் லாகூரில் ஆரம்பித்தனர்.

**வெளிநாடுகளில் இந்திய பயங்கரவாத செயல்கள்:**

- 1905 ல் ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா என்பவர் லண்டனில் இந்திய தன்னாட்சி சமூகம் (Indian Home rule Society) - இந்தியா இல்லம் (India House) என்ற அமைப்பையும் The Sociologist பத்திரிக்கையை ஆரம்பித்தார்.
- பாரிஸ் மற்றும் ஜெனிவாவில் மேடம் பிகாஜிகாமா என்பவர் புரட்சிகர செயலாற்றினார். வந்தே மாதரம் என்ற இதழையும் நடத்தினார்.
- பெர்லினில் விரேந்திரநாத் என்பவர் புரட்சிகர செயல்களில் ஈடுபட்டு வந்தார்.

**முதல் உலகப் போரின் போது பயங்கரவாத செயல்கள்:**

- 1913 ல் ராம்தாஸ்பூரி, G.D. குமார், தாரக்நாத் தாஸ், சோகன் சிங் பக்னா மற்றும் லாலா ஹர்தயாள் ஆகியோர் அமெரிக்காவில் சான் பிரான்சிஸ்கோ பகுதியில் காதர் கட்சியையும் (The Ghadr Party), காதர் (The Ghadr) வாரப் பத்திரிக்கையையும் ஆரம்பித்தனர்.
- காதர் கட்சி உருவாவதற்கு முன்பே பயங்கரவாத செயல்களை நடத்த சுதேச சேவக் இல்லம் (Swedesh Sevak Home) , (United India House) என்ற அமைப்பை சியாட்டல் (Seattle) என்னும் இடத்திலும் ஏற்படுத்தியிருந்தனர் இந்திய பயங்கரவாதிகள்.

**கொமகத்த மரு நிகழ்வு (Komagata Maru Incident) - 1914**

- சிங்கப்பூரிலிருந்து கனடாவில் வான்குவெர் பகுதிக்கு சீக்கியர்கள்

மற்றும் பஞ்சாபிகளை கொண்டு சென்ற கப்பலின் பெயர் கொமகத்த மரு ஆகும். பிரிட்டிஷாரின் தூண்டுதலால் கனடாவின் அரசாங்கம் கப்பலை திருப்பி அனுப்ப அது செப்டம்பர் 1914ல் கல்கத்தாவில் கரை தொட்டது. மக்கள் கப்பலிலிருந்து இறங்கமறுத்து பஞ்சாப் செல்லும் ரயிலில் செல்ல விரும்பாமல் போராட்டம் செய்தனர். இதனால் காவலர்களுக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட சண்டையில் 22 பேர் இறந்தனர். இது கொமத்த மரு நிகழ்வாகும்.

- 1915 ல் இந்திய விடுதலைக்கான பெர்லின் கமிட்டி - வீரேந்திரநாத் சட்டோபதி, புபேந்திரநாத் தத்தா, லாலா ஹர்தயாள் ஆகியோரால் ஐரோப்பாவில் ஏற்படுத்தப்பட்டது.

**2. பயங்கரவாதிகள் காலம் - இரண்டாம் நிலை (1923 - 31):**

**பஞ்சாப் - ஒன்றுபட்ட மாகாணம் பீகார் பகுதிகளில் பயங்கரவாத செயல்பாடுகள்**

- 1924 ல் ஹிந்துஸ்தான் குடியரசு கூட்டமைப்பு (Hindustan Republican Association) கான்பூரில் ராம்பிரசாத் பிஸ்மில், ஜோகேஷ் சந்திர சாட்டர்ஜி மற்றும் சச்சின் சன்யால் ஆகியோரால் ஏற்படுத்தப்பட்டது. இது பிறகு 1928 ல் ஹிந்துஸ்தான் சோஷியலிஸ்ட் குடியரசு கூட்டமைப்பு (Hindustan Socialist Republican Assocation) என பெயர் மாற்றப்பட்டது.
- ககோரி கொள்ளை 1925 - லக்னோ (Kakori Robbery)
- பிஸ்மில், ரோஷன் சிங் மற்றும் ராஜேந்திர லகிரி ஆகியோரால் நடத்தப்பட்டது.
- HSRA (Hindustan Socialist Republication Association) அமைப்பில் குறிப்பிடத்தக்கவர்கள் i) பகத்சிங், சுக்தேவ், வோக்ரா (பஞ்சாப்)
- ii) பிஜோய் குமார் சின்கா, சிவ் வெர்மா, ஜெய் தேவ் - ஒன்றுபட்ட மாகாணம்.
- HSRA வின் செயல்பாடுகள்

  i) லாகூர், டிசம்பர் 1928 - லாலாலஜபதிராய் இறப்புக்கு காரணமான சைமன் குழுவிற்கு எதிரான போராட்டத்தை ஒடுக்கிய போலீஸ் அதிகாரி சாண்டர்ஸ் கொலை செய்யப்படுதல்.

  (சாண்டர்ஸ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் - பகத்சிங், ஆசாத், ராஜ்குரு)

  ii) பகத்சிங் மற்றும் பட்டு கேஷ்வர் தத் ஆகியோர் இணைந்து ஏப்ரல் 1929ல் மத்திய சட்ட மன்றத்தில் வெடி குண்டை வீசி தாக்குதல் நடத்தினர். பகத்சிங், ராஜ்குரு,

சுக்தேவ் ஆகியோர் லாகூர் சதி வழக்கில் (1929) குற்றம் சாட்டப்பட்டனர். இறுதியாக ஆசாத் பிப்ரவரி 1931ல் போலிஸ் என்கவுண்ட்டரில் சுட்டுக் கொல்லப்பட்டார். பகத்சிங், சுக்தேவ் மற்றும் ராஜ்குரு ஆகியோர் **மார்ச் 23, 1931 ல் தூக்கிலிடப்பட்டனர்.** 1926 ல் பஞ்சாப் நௌஜவான் பகுதியில் பயங்கரவாத செயல்கள் பாரத் சபை (Punjab Naujavan Charat Sabha) அமைக்க பகத்சிங் உதவினார்.

- ❖ **சூர்யா சென்** தலைமையில் **சிட்டகாங் புரட்சிக் குழு** ஏப்ரல் 1930 -ல் சிட்டகாங் ஆயுத கிடங்கை சூரையாடியது. இதில் சூர்யா சென்னிற்கு உதவியாக செயல்பட்டவர்கள் -ஆனந்த சிங், கணேஷ் கோஷ் மற்றும் லோகிநாத் பால் ஆவார். இதுவே சிட்டங்காக் ஆயுதக் கடத்தல் ஆகும். இறுதியாக பிப்ரவரி 1933ல் கைது செய்யப்பட்டு ஜனவரி 1934 தூக்கிலிடப்பட்டார்.

**புரட்சிகர புத்தகம்**

- ❖ The Philosophy of the Bomb பகவதிச்சரன் வோரா என்பவரால் எழுதப்பட்டது. (Bhagwaticharan Vora).